# 04

# கணக்கீடு

## அலகு ரீதியான மீட்டல் செயலட்டைகள்

## தரம் 12

### முதன்மை ஏடுகள்

## பகுதி 1

01) தளபாட கொடுக்கல் வாங்கலுடன் தொடர்புடைய முதன்மை ஏடுகளை பெயரிடுக. **(தளபாடத்தை கொள்வனவு செய்து விற்பனை செய்யும் நிறுவனம்)**

1. நிறுவனத்தின் பாவனைக்காக தளபாடங்களை கொள்வனவு செய்தல். …………………
2. தளபாடத்தை வாங்கிய ஒருவரிடம் காசைப் பெறும் போது கழிவொன்றை வழங்குதல். ………………..
3. தளபாட இருப்பை திருப்பி அனுப்புதல். …………………………………
4. வியாபாரத்தின் மின்சாரத்தை செலுத்துதல். ……………………………
5. விற்பனை தளபாடங்களை கடனுக்கு கொள்வனவு செய்தல். …………………………..

02) கணக்கீட்டு ஆண்டின் முடிவில் நிறுவனத்திலுள்ள மொத்த வருமானங்களையும், செலவுகளையும் வருமான செலவு கணக்குக்கு மாற்றும் போது ஆரம்ப பதிவு மேற்கொள்ள வேண்டியது

1. பொதுநாட்குறிப்பு
2. காசுப்பெறுவனவு நாட்குறிப்பேடு
3. சில்லறை காசு கொடுப்பனவு நாட்குறிப்பேடு
4. ஆரம்ப பதிவு
5. வெளித்திரும்பல் நாட்குறிப்பேடு

03) பின்வரும் தகவல்கள் ABC நிறுவனத்தின் ஜனவரி மாதத்துடன் தொடர்புடையது.

01. (அ) 01.01 – உரிமையாளரினால் ஈடுபடுத்தப்பட்ட மேலதிக மூலதனம் ரூ.5000

(ஆ) 01.08 - ரூபா.100 000 இருப்புக்களை கொள்வனவு செய்தல்.

(இ) 01.15 – 01.08 ல் கொள்வனவு செய்த இருப்பில் 50% கிரயமான இருப்புக்கள் 20% இலாபம் வைத்து விற்கப்பட்டது.

(ஈ) 01.20 இயந்திரமொன்று கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டது.

(உ) 01.30 உரிமையாளர் பொருள்பற்று ரூபா.10 000

BUSINESS & COMMERCE BRANCH

மேற்குறிப்பிட்ட 01.01, 01.20, 01.30 ஆகிய தினங்களில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்புடைய மூல ஆவணங்கள் முறையே,

1. பற்றுச்சீட்டு, பொது நாட்குறிப்பேடு, பொது நாட்குறிப்பேடு
2. பொது நாட்குறிப்பேட்டு கைச்சாத்து, பொது நாட்குறிப்பேட்டு கைச்சாத்து, பொது நாட்குறிப்பேட்டு கைச்சாத்து
3. பற்றுச்சீட்டு, காசு கொடுப்பனவு கைச்சாத்து, பொது நாட்குறிப்பேட்டு கைச்சாத்து
4. பொது நாட்குறிப்பேட்டு கைச்சாத்து,காசு கொடுப்பனவு கைச்சாத்து, பொது நாட்குறிப்பேட்டு கைச்சாத்து
5. பற்றுச்சீட்டு, விற்பனைப்பட்டியல், கொள்வனவுப்பட்டியல்

02. ஜனவரி மாதத்தின் இருப்புப்பெறுமதி ரூ20 000 எனின் இந்த கொடுக்கல் வாங்கல்களின் பின் இறுதி இருப்பு யாது?

04) பின்வரும் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்வதற்கான மூல ஆவணங்கள் யாது?
1. பெற்ற கழிவு,
2. வங்கிக்கட்டணம்,
3. அறவிட முடியா கடன்,
4. சம்பளமும் கூலியும்.

05) பின்வரும் விடயங்கள் உண்மையா? பொய்யா? ஏனக் குறிப்பிடுக.
1. VAT கணக்கு மீதி எப்போதும் வரவு மீதியாகும். (   )
2. காணி விற்பனை வியாபாரத்தில் காணி கடனுக்கு கொள்வனவு செய்தல் பொது நாட்குறிப்பேட்டில் பதியப்படும். (   )
3. வெளித்திரும்பல் நாட்குறிப்பேட்டுடன் தொடர்பான மூல ஆவணம் வரவுத்தாளாகும். (   )
4. கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக்கணக்கு செலவும், கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக்கணக்கு வரவிலும் பதிவது எதிரீடாகும். (   )

06) நிறுவனத்தின் சில்லறை காசு வசக்கட்டு ரூ.2000 2021.04.01ல் சில்லறை காசாளரிடம் மீதி ரூ.150. ஏப்ரல் மாதத்தில் வசக்கட்டு இன்னும் ரூ.1000 ஆல் அதிகரிக்கப்படுகிறது.
2021.04.31 ம் திகதி ரூ.200 சில்லறை காசாளரிடம் காணப்படுகிறது.
2021.04.01ம் திகதி மற்றும் 2021.04.31 ம் திகதியும் மீள்நிரப்பப்பட்ட காசுத்தொகை எவ்வளவு?

07) வங்கிக்கூற்று மீதி, சீராக்குவதற்கு முன் உள்ள காசுக்கட்டுப்பாட்டு கணக்கு மீதி வேறுபடுவதற்கான காரணம் யாது?

08) 2021.03.31 வியாபாரத்தின் காசு கட்டுப்பாட்டு கணக்கு மீதி ரூ.210000 (செ) வங்கிமேலதிகப்பற்றாகும். அத்தினத்தில் உள்ள காசு கட்டுப்பாட்டு கணக்கு மீதி வங்கிக்கூற்று மீதியுடன் இணங்கவில்லை. அதற்கான காரணம் வங்கிக்கட்டணம் ரூ.1000 கணக்குகளில் பதியப்படாமை.
நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட ரூ.50 000 காசோலை வங்கியில் மாற்றப்படாமை.
2021.03.31ம் திகதி நிதிக்கூற்றில் இடம்பெற வேண்டிய காசுமீதி மற்றும், 2021.03.31ம் திகதிக்கு வங்கிக்கூற்று மீதியும் முறையே
1. 209 000 (வரவு) 259 000 (செலவு)
2. 209 000 (செலவு) 259 000 (வரவு)
3. 211 000 (செலவு) 161 000 (வரவு)
4. 211 000 (வரவு) 161 000 (செலவு)
5. 211 000 (வரவு) 161 000 (செலவு)

BUSINESS & COMMERCE BRANCH

09) வணிகமொன்றின் சீராக்கப்பட்ட காசு கட்டுப்பாட்டு கணக்கு மீதி ரூ 150 000 ஆகும். வணிகத்தினால் வழங்கப்பட்டு கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படாத காசோலைகளின் பெறுமதியை விட வைப்புச்செய்யப்பட்டு வசூலிக்கப்படாத காசோலைகளின் பெறுமதி ரூ 10 000 இல் அதிகமாகும். எனின் அவ்வணிகத்தினால் வங்கிக்கூற்றின்படி வங்கி மீதி?

10) வரையறுக்கப்பட்ட ரெஜீனா கம்பனியின் 2022.03.31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான தரவுகள் வருமாறு.

| | ரூ |
|---|---|
| கடன் விற்பனை | 150 000 |
| கொடுத்த கழிவு | 2 000 |
| வெளத்திருப்பம் | 5 000 |
| பெற்றக்கழிவு | 3 000 |
| கடன்பட்டோரிடமிருந்து பெறுவனவு | 50 000 |
| கடன்பட்டோரிடமிருந்து பெற்று வைப்புசெய்யப்பட்டு மறுக்கப்பட்ட காசோலைகள் | 1 000 |
| ஐயக்கடன் ஏற்பாடு | 500 |
| அறவிட முடியா கடன் | 3 000 |
| மீளப்பெற்ற அறவிட முடியா கடன் | 250 |

1. 2021.03.31 இல் நிதிக்கூற்றுகளில் வெளிக்காட்ட வேண்டிய வியாபார வருமதிகளின் பெறுமதி எவ்வளவு?
2. 2021.03.31 இல் வருமானக் கூற்றில் காட்டப்பட வேண்டிய மொத்தச் செலவுகள்.?

BUSINESS & COMMERCE BRANCH